# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1805 - 2013 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2013.04.05

*1805 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி*

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 980 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 994 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 998 |


***கவனிக்க.-*** (i) *ஸ்ரீலங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## நுவரெலியா பிரதேச சபை

### பதவிகள் - வெற்றிடம்

நுவரெலியா பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்காணும் பதவிகளிற்காக விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகிறது.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள திட்டம் | தேவையான கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | சாரதி | 03 | PL3-2006 (A) | ரூ. 12,470-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,860 | க. பொ. த./சா. த. பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக்குறைந்தது 06 பாடங்களில் சித்தி. |
| 02 | மின்தொழில் நுட்ப உதவியாளர் | 01 | PL2-2006 (A) | ரூ. 12,210-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,600 | க. பொ. த./சா. த. பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக்குறைந்தது 06 பாடங்களில் சித்தி. |
| 03 | மின்தகன சாலை இயக்குநர் | 01 | PL2-2006 (A) | ரூ. 12,210-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,600 | க. பொ. த./சா. த. பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக்குறைந்தது 06 பாடங்களில் சித்தி. |
| 04 | மின்தகன சாலை உதவியாளர் | 01 | PL1-2006 (A) | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | எட்டாம் (08) வகுப்பு சித்தி (09 ஆம் ஆண்டு) |
| 05 | வீதி தொழிலாளர் | 09 | PL1-2006 (A) | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | எட்டாம் (08) வகுப்பு சித்தி (09 ஆம் ஆண்டு) |
| 06 | சுகாதார தொழிலாளர் | 01 | PL1-2006 (A) | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | எட்டாம் (08) வகுப்பு சித்தி (09 ஆம் ஆண்டு) |

**பொதுவான தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி பரம்பரையில் பதிவு செய்ததின் பிரகாரம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரி நுவரெலியா பிரதேச சபையின் எல்லைக்குள் கடந்த 03 வருட காலத்திற்குள் நிர்நரதரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதிசெய்தல் வேண்டும்.) (நுவரெலியா பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீட்டு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் நுவரெலியா பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பது கட்டாயமில்லை.) ;

(3) நுவரெலியா பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(4) நன்னடத்தையுடன் கூடிய சுகதேகியாக இருத்தல் வேண்டும் ;

(5) விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் திகதிக்கு வயது 18 குறையாது 45 க்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையில் இருப்பவருக்கு வயது எல்லை கருத்தில் கொள்ளப்படாது ஆனால் பதவிக்கு சேர்த்து கொள்ளும் திகதிக்கு குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருத்தல் வேண்டும் ;

(6) விண்ணப்பதாரி தண்ட சட்ட விதிமுறையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்ற தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராகவோ மாகாண அரச சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருக்க கூடாது ;

(7) சேவையின் தேவைக்கமைய முறையான நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் ;

(8) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துகொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது நுவரெலியா பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை :**

(1) நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர் ;

(2) குறிப்பிட்ட தகைமைகள் பூர்த்தி செய்தவர்களை மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவை நிபந்தனைகள் :**

(1) இப்பதவி ஓய்வூதியத்திற்கு உட்பட்டது ;

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வு ஊதிய நிதியத்தின் அங்கத்துவம் உரியதாகும் ;

(3) பதவி 03 வருட சேவை காலத்திற்கு உட்படுவதுடன் அவ் 03 வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவியை நிரந்தரப்படுத்தப்படும் ;

(4) இச்சேர்த்துக்கொள்ளல் இலங்கை குடியரசின் ஸ்தாபன கோவையின் சட்டதிட்டங்களுக்கும் நிதி சட்டதிட்டங்களக்கும் திணைக்கள கட்டளைக்கும் அரச அல்லது மத்திய மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைக்கு அயைம செயற்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை.-** விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை A 4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2013.04.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், நுவரெலியா பிரதேச சபை, கொட்டகலை என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி “ .........................” என்று குறிப்பிடப்பட வேண்டும். பூர்த்தி அற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்களை நிராகரிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்து கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது நுவரெலியா பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

பெருமாள் பிரதீப்,
செயலாளர்,
நுவரெலியா பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நுவரெலியா,
2013, ஏப்பிறல் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

........................................................................ பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்து குறிப்பிடப்படும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதியில் வயது :-
 வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் விபரம் :----.
9. விவாகமானவரா? /விவாகமாகாதவரா? :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையில் அல்லது பதிவு செய்ததின் பிரகாரமா? :----.
12. கல்வித் தகைமைகள் :----.

13. தொழில் பயிற்சி அனுபவம் :----.

14. நீங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :----.

(i) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

(iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா?) :----.

15. நீர் எப்போதாவது அல்லது குற்றச்சாட்டுக்காக நீதி மன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிபடுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானதென இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முன் தெரிய வந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்த பின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நஷ்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிறுவன தலைவரின் சான்றிதழ்**

அவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ..........................................................இந்நிறுவனத்தில் ..................................... ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவன்/அவளை இச் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அவன்/அவள் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

--------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
பதவிக்கான முத்திரை :----.

4-79

---

**திஹகொட பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு

திஹகொட பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதிவாய்ந்த மற்றும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு. தற்போது திஹகொட பிரதேச சபையில் நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/கொந்திராத்/முறையில் சேவை புரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவிப் பெயர் | வெற்றிடம் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| 01. ஆயுர்வேத கூலியாள் | 01 | ரூ. 11,730-10×120 – 10×130-10×145- -12×160-ரூபா | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் குறைந்தளவில் ஆறாம் தரத்தை சித்தியடைந்திருத்தல் (06 ஆண்டு) |
| 02. வீதி | 02 | ரூ. 11,730-10×120 – 10×130-10×145- -12×160-ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் குறைந்தளவில் ஆறாம் தரத்தை சித்தியடைந்திருத்தல் (06 ஆண்டு) |

**விண்ணப்பதாரர்களுக்கு தேவையான ஏனைய தகைமைகள் மற்றும் பொது நிபந்தனைகள்**.- (1) அரச சேவையில் மற்றும் அரச கூட்டுத்தாபனத்தில் சேவை புரிந்து திறமையின்மை காரணமாக கட்டாயமாக ஓய்வுபெறச் செய்தவர் அல்லது சேவையிலிருந்து நீக்குவதற்கு பதிலாக மனிதாபிமான வேறு செயற்பாடாக ஓய்வு பெறச் செய்தவர் அல்லது தண்டனைக்காக ஓய்வுபெறச் செய்தவர், அல்லது வினைத்திறமைப் பரீட்சையின் பின் சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக அல்லது தமது பதவியை விட்டுச்சென்றவராக இருத்தல் கூடாது ;

(2) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராக நடத்தப்பட்ட நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(3) ஏதாவது நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது குற்றவியல் வழக்கு சரத்தின் 449 ஆவது சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(4) சொத்துக்கள் சூனியமாக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(5) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(6) நன்னடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(7) 2013.04.01 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு கூடாததுமாக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது ;

(8) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு தென் மாகாணத்தினுள் குறைந்தளவு 03 வருட கால நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(9) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல் அனைத்து தகுதிகளும் திஹகொட பிரதேச சபையின் அதிகாரத்தின்படியே.

**விஷேட தகைமைகள்**.- (1)விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு குறைந்தளவு திஹகொட பிரதேச சபை வலுப் பிரதேசத்தினுள் 03 வருட கால நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(2) வீதி ஊழியர் பதவி தொடர்பாக முச்சக்கர வண்டி மற்றும் நிறை வாகன சாரதி உத்தரவுப்பத்திரம் இருத்தல். மின்சார தொழில்நுட்ப மற்றும் இயந்திர இயக்கம் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல். மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல். தச்சுத் தொழில் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல், விஷேட தகைமைகளாக கருதப்படும்.

(3) தற்போது திஹகொட பிரதேச சபையில் சேவை புரிந்து சம்பளம் பெறுதல் விஷேட தகுதியாகும் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ஆட்சேர்க்கும் முறை**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் சட்டபூர்வமான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு முகம் கொடுத்த பின்பே தகைமைகளின்படி ஆட்சேர்ப்பு நடைபெறும்.

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்**.-(1) இப்பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியத்தை உடையதுமாகும். விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உரித்துடையவர் ஆவர் ;

(2) இந்த ஆட்சேர்ப்பு அரச கொள்கைகளுக்கும் தென் மாகாண சபையின் அரச சேவை கொமிசன் சபை தென் மாகாண சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் சுற்று நிரூபங்களுக்கும் திணைக்களத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும் ;

(3) அரச உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்தின்படி பிணைக்காக கையொப்பமிடல் வேண்டும் ;

(4) அரச கொள்கைகளுக்கு இணங்க விதிக்கப்பட்ட பாசைத் திறன்களைப் பெறுதல் வேண்டும் ;

(5) ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளின்படி போலித் தகவல்கள் கொடுத்திருப்பது தெரிய வந்தால் ஆட்சேர்ப்பு இரத்துச் செய்யப்படும் ;

(6) சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர் ;

(7) இப்பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதோடு 03 வருடத்தின் பின் வேலை, வருகை நடத்தை என்பன சிறந்த நிலையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கப்படவேண்டிய முறை**.- இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2013.04.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக தலைவர், திஹகொட பிரதேச சபை, திஹகொட என்ற முகவரிக்கு அல்லது திஹகொட பிரதேச சபையின் செயலாளர் என்ற முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடல் வேண்டும்.

தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் தாங்களின் விண்ணப்பப் படிவங்களை நிருவாகத் தலைவரூடாக அனுப்பிவைக்கப்படவேண்டியதோடு, உரிய திகதிக்குப் பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

விண்ணப்பப்பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்);
4. சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
5. வேறு தகுதிகளைக் கொண்ட சான்றிதழ்கள்.

நிர்மாள் சமரசிங்க,
தலைவர்,
திஹகொட பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திஹகொட பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவை பதவிகள்

.................................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
2. நிரந்தர வதிவு மாவட்டம் :-----.
3. நிரந்தரமாக வதியும் பிரதேச செயலகம் :-----.
4. நிரந்தர விலாசம் :-----.
5. ஆண்/பெண் :-----.
6. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :-----.
7. பிறந்த திகதி :- ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
9. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பிரஜா உரிமை மூலமா ? பதிவின் மூலமா? :-----.
10. கல்வித் தகைமைகள் :-----.
11. வேறு தகைமைகள் :-----.
12. தொழில் பயிற்சி :-----.
13. விஷேட தகைமைகள் :-----.
14. சேவைத் தகைமைகள் :-----.
   (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் :-----.
   (ஆ) தற்போதைய பதவி :-----.
   (இ) தற்போது வசிக்கும் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி :-----.
   (ஈ) இதற்கு முன் சேவை புரிந்த பதவியின் தன்மை :-----.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் இரத்துச் செய்யப்பட, வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-139

**மத்துகம பிரதேச சபை**

பதவி - வெற்றிடங்கள்

மத்துகம பிரதேச சபையில் வெற்றிடங்களாகியுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மத்துகம பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

| | பதவி வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | வர்த்தகக்கடை மேற்பார்வை யாளர் (Market Supervisor) | 01 | அ. சு. நி. (6-2006 (iv) MN.1-2006 (A) மாதாந்தம் ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (நான்காவது சம்பளப் படிக்கு வருவதற்கு முன்னர் வினைத்திறமை காண் தடைதாண்டல்) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட (04) பாடங்களுக்கு திறமைச் சித்தி அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | சிங்களம், தமிழ் மொழிகள் பேசக்கூடிய வராக இருத்தல் வேண்டும். |
| 02 | வேலை/ கள மேற்பார்வை யாளர் (Work Field Supervisor) | 01 | அ. சு. நி. (6-2006(iv) MN.1-2006 (A) மாதாந்தம் ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (நான்காவது சம்பளப் படிக்கு வருவதற்கு முன்னர் வினைத்திறமை காண் தடைதாண்டல்) | (i) சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் தராதரப்பத்திர பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வாறு எண்கணிதம்/ கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>(ii) தேசிய கல்விப் பொது தராதரப் பத்திர பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட (06) ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>(iii) உள்ளூராட்சிமன்றமொன்றில் குறைந்தபட்சம் 10 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவர் என்றால் 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும். | |
| 03 | சுகாதார மேற்பார்வை யாளர் | 01 | அ. சு. நி. (6-2006(iv) MN.1-2006 (A) மாதாந்தம் ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (நான்காவது சம்பளப் படிக்கு வருவதற்கு முன்னர் வினைத்திறமை காண் தடைதாண்டல்) | (i) க. பொ. த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம், எண்கணிதம்/ வர்த்தக எண் கணிதம், உடல் கல்வி விஞ்ஞானம்/ சுகாதாரம்/ விஞ்ஞானம் உட்பட குறைந்தபட்சம் (05) ஐந்து பாடங்களுக்கு திறமைச் சித்தி அடங்களாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>(ii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் | |

| | பதவிப் வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | கணிதம், எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம், உடல் கல்வி விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்கும் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒருவர். <br> அல்லது <br> (iii) உள்ளூராட்சிமன்றமொன்றில் குறைந்தபட்சம் 10 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவர் என்றால் 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும். | |
| 04 | சுகாதாரத் தொழிலாளர்கள் (அலுவலக பணியாளர் சேவையில் III ஆம் வகுப்பு) | 10 | அ. சு. நி. (6-2006 (iv) P-L.1-2006 A) மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (வினைதிறமைகாண் தடை தாண்டல் நான்காவது வருடாந்த சம்பளப்படிக்கு வருவதற்கு முன்னர்) | கல்வித் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. | |
| 05 | தகனபீட செயற்பாட்டாளரின் உதவியாளர் | 02 | அ. சு. நி. (6-2006 (iv) P-L.1-2006 A) மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (வினைதிறமைகாண் தடை தாண்டல் நான்காவது வருடாந்த சம்பளப்படிக்கு வருவதற்கு முன்னர்) | குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | |
| 06 | நூலக ஊழியர் (அலுவலக பணியாளர் சேவையில் II ஆம் வகுப்பு) | 06 | அ. சு. நி. (6-2006 (iv) P-L.1-2006 A) மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (வினைதிறமைகாண் தடை தாண்டல் நான்காவது வருடாந்த சம்பளப்படிக்கு (ரூபா 13,840) வருவதற்கு முன்னர் சித்திபெறுதல்) இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 12 ஆவது படி (ரூபா 13,060) ஆரம்ப சம்பளப்படியாக கருதப்பட வேண்டும். | க. பொ. த. (ச./த.) ஒரே தடவையில் ஏதாவது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | |

| | பதவிப் வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 07 | காவலாளி (அலுவலக பணியாளர் சேவையில் II ஆம் வகுப்பு) | 02 | அ. சு. நி. (6-2006 (iv) P-L.1-2006 A) மாதாந்தம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (வினைதிறமைகாண் தடை தாண்டல் நான்காவது வருடாந்த சம்பளப்படிக்கு (ரூபா 13,840) வருவதற்கு முன்னர் சித்திபெறுதல்) இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 12 ஆவது படி (ரூபா 13,060) ஆரம்ப சம்பளப்படியாக கருதப்பட வேண்டும். | க. பொ. த. (ச./த.) ஒரே தடவையில் ஏதாவது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | |

02. மத்துகம பிரதேச சபையில் ஏற்கனவே அமைய, பதிலீடு அல்லது வேலைத்திட்டம் அடிப்படையில் கடமை புரிகின்றவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

03. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது வருடங்கள் 18க்கு குறையாதும் 45 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

04. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மேல் மாகாணத்தினுள் 03 வருடங்களுக்கு குறையாத காலம் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்பட்டியல் மூலம் அல்லது கிராம சேவை உத்தியோகத்தர்/பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் நிரூபிக்க வேுண்டும்) ;

(iv) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறுவனத்தின் மூலம் சேவையில் இருந்து விலக்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது என்பதுடன் அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வூபெற்ற ஒருவராய் இருத்தலாகாது ;

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது ;

(vi) தேவைப்படுமானால் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிணையொன்றை பணத்தினால் அல்லது காப்புறுதிச் சான்றிதழ் ஒன்றினால் வைப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும் ;

(vii) மேற்பார்வையாளர் பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவது அரச நிருவாக சுற்றறிக்கை 15/90 இன் பிரகாரம் எழுத்து மூலப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலாகும் ;

(viii) எழுத்துமூல பரீட்சை.- பொது நுண்ணறிவை பரிசோதிப்பதற்காக 1 மணித்தியால வினாத்தாளும் மற்றும் பொது அறிவை பரிசோதிப்பதற்காக 1 மணித்தியால வினாத்தாளும் வழங்கப்படும் ;

(ix) சுகாதார தொழிலாளர் பதவிகளுக்காக இணைத்துக்கொள்பவர்கள் குப்பைகள் அகற்றும் பணிக்காக மட்டும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

05. **பொது நிபந்தனைகள்** :

(i) சிறந்த ஆளுமை படைத்தவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இந்துப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும் ;

(iii) மூன்று வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும் ;

(iv) தகுதிகாண் காலத்தின் இறுதியில் நிரந்தரமாக்குவது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும் ;

(v) ஆட்சேர்ப்பின் பின்னர், தங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் அல்லது ஏனைய தகைமைகள் போழியானது அல்லது உண்மையற்றது என உறுதிப்படுத்தப்பட்டால் வேறு எந்தவித அறிவித்தலுமின்றி நியமனம் ரத்து செய்யப்படும்.

06. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பதாரிகள் இங்கு உப ஆவணத்தில் தரப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.04.26 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மத்துகம" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். தாமதமாக கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.

07. தகைமைகள் உள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

08. விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் நேர்முகப்பரீட்சையின்போது மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளர் சான்றிதழ்/வாக்காளர் பெயர்பட்டியலின் நிழல்பிரதி ;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒரு சான்றிதழ் கிராம சேவை உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)
(உ) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

09. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இந்த அறிவித்தலை இரத்தச் செய்தல் போன்ற அதிகாரங்கள் மத்துகம பிரதேச சபையின் செயலாளருக்கு உள்ளது ;

10. ஆட்சேர்ப்பு திகதி அன்று ஏற்பட்டுள்ள சகல வெற்றிடங்களையும், நிரப்புவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதானல் மேற்கூறப்படும் பதவி எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

அசோக்க ரணசிங்க,
செயலாளர்,
மத்துகம பிரதேச சபை.

2013.03.21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்துகம பிரதேச சபை**

........................................................................ பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துடன் பெயர் :----.
முதலெழுத்தினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
2. தபால் விலாசம் :----.
3. பிறந்த திகதி :- வருடம் :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அன்று வயது :-
வருடம் :----, மாதம் : ----, நாள் :----.
5. திருமணமானவர் /திருமணமாகாதவர் :----.
6. இனம் :----.
7. இலங்கை பிரசையா? ஆம் என்றால் பரம்பரையிலா? பதிவினாலா? :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழில் தகைமைகள் :----.
10. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிபவர் என்றால் :----.
(i) தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(ii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(iii) நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீடு/ஒப்பந்தம் என்பது பற்றி :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என உறுதிமொழிகிறேன். மேற்குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துக்கொள்ள முன்னர் தகுதியற்றவறாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவென் என்பதையும் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :----.

4-272

## பொல்கஹவெல பிரதேச சபை

பொல்கஹவெல பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற உப அட்டவணையில் காணப்படும் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்காக பிரதேசசபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதிவினர்களிடத்திலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி. சு 06/2006iv)படி | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 01 | சாரதி | தேர்ச்சி பெற்ற 111 | 03 | ரூ.12,470-10×130-10×145-10×160-12×170-18,860/- (PL3 2006A) நான்காவது சம்பள திட்டத்திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைய வேண்டும் | (1) கல்விப் பொது தராதர (சதாரணதர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் இரண்டு பாடங்களுக்கு திறமை சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத) குறைந்த பட்சம் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(2) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்ப தாரிகள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9ஆம் வகுப்பு ) சித்தியடைந்திருத்தல் வேண்டும். 2009.05.12 ஆந் திகதி ஆகும் போது மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக அமய/தற்காலிக/ ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவை யாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் உரிய ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும்.<br>**தொழில்தகைமை**<br>(1) பொதியில்லாத எடை ஹொன்டர் 34 இற்கு அதிக மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக்கூடிய பஸ் வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (A தர சாரதி அத்தாட்சிப் பத்திரம்)<br>(2) திணைக்களத்தில் ஒரு முகவர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் மோட்டார் வாகனப்பிரிவில் உத்தி யோகத்தர்கள் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் வாகனம் ஓட்டும் செயற்பாட்டு பரீசீலனையில் சித்தி யடைதல் வேண்டும். வாகன சாரதியாக 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.(சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக் கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி. சு 06/2006iv)படி | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 02 | மருந்தகர் | பகுதி தேர்ச்சி பெற்ற 111 | 01 | ரூ.12,210-10×130-10×145-10×170-18,600/-(PL2 2006A) நான்காவது சம்பள திட்டத்திற்கு முன்தடை தாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | (1) கல்விப் பொத தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>(2) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறு வனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(3) 2009.05. 12 ஆந் திகதி ஆகும் போது மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவை யாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்தின்படி கல்வித்தகைமை உடையதாகும்.<br>**தொழில் தகைமை**<br>(1) பதவியின் நிலையில் தொழில் தகைமையில் உரிய கல்வி ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப /தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வெளியிடப்படும் N.V.Q 2 அல்லது 3 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்<br>(2) உரிய துறையில் பயிற்சிக்காலம் தவிர்த்து 2 வருடங்கள் அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். |
| 03 | வேலை நிருவா கத்தர் | பகுதி தேர்ச்சி பெற்ற 111 | 01 | ரூ.12,210-10×130-10×145-12×170-18,600/-(PL-2-2006A) நான்காவது சம்பள திட்டத்திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | (1) கல்வி பொது தாராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>(2) தற்பொது மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9அம் வகுப்பு) சித்திடைந்திருத்தல் வேண்டும்.<br>(3) 2009.05.12 ஆந் திகதி ஆகும் போது ஆரம்ப இடைநிலை தொழிநுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்டமுறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்தின்படி கல்வித்தகைமை உடையதாகும். |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி. சு 06/2006iv)படி | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| | | | | | **தொழில் தகைமை**<br>1. பதவியின் நிலையில் தொழில் தகைமையில் உரிய தொழில் பயிற்சி அதிகாரியினால் வெளியிடப்படும் தொழில் நுட்ப பயிற்சி பற்றிய N.V.Q.2 அல்லது 3 ஆம் தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>2. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பயிற்சிக்காலம் தவிர 2 வருடம் செயல்முறை அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) |
| 04 | பாதைகள் தொழிலாளர் | தேர்ச்சி அற்ற 111 | 07 | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-17,600-PL-1-2006A)<br>நான்காவது சம்பளத்திட்டத்திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | **கல்வித் தகைமை**<br>1. கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப் பாடம் அல்லாத)<br>2. 2008.11.19 ஆந் திகதி ஆகும் போது நூலக உதவியாளர் பதவிக்காக அமைய/ தற்காலிக/ ஒப்பந்த முறையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்தின் படி கல்வித் தகைமை உடையதாகும். |
| 05 | வியாபார நிலைய பரிபாலகர் | தேர்ச்சி அற்ற 111 | 01 | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-17,600/-(PL-I-2006A)<br>நான்காவது சம்பளதிட்டத்திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | **கல்வித் தகைமை**<br>1. கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப் பாடம் அல்லாத)<br>2. 2008.11.19 ஆந் திகதியாகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிபட்டமுறையில் அப்போது உள்ள சேர்த்துக் கொள்ளப்படும் சட்டத்தின் படி கல்வித்தகைமை உடையதாகும். |
| 06 | நகர சாலை பொறுப்பாளர் | தேர்ச்சி அற்ற 111 | 01 | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-17,600/-(PL-I-2006 A)<br>நான்காவது சம்பளதிட்டத்திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | **கல்வித் தகைமை**<br>1. கல்விப் பொது தராதர சதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப் பாடம் அல்லாத)<br>2. 2008.11.19 ஆந் திகதியாகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும். |

| தொ. இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி. சு 06/2006iv)படி | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| 07 | சுகாதார தொழி லாளி | தேர்ச்சி அற்ற 111 | 11 | ரூ.11730-10×120-10×130-10×145-12×160-17600/-(PLI-2006A) நான்காவது சம்பள திட்டத் திற்கு முன் தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | கல்வித் தகைமை<br>1. கல்வி பொது தாராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>2. 2008. 11. 19 ஆந் திகதியாகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த் துக்கொள்ளப்படும் சட்டத்தின் படி கல்வித் தகைமை உடையதாகும். |

**2. தேவையான வேறு தகுதிகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.
(ii) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்குக் குறையாத காலத்தினுள் பொல்கஹவெல அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம அலுவலரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயளாலரினால் பிரதி கையொப்பமிட்டு சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)
(iv) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)
(v) தற்போது ஆரம்ப தேர்ச்சி பெற்ற மற்றும் பகுதி தேர்ச்சி பெற்ற பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.
(vi) விண்ணப்பதாரிகள் தண்டனைக்குரிய சட்டப்படி நீதிமன்றத்தால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.
(vii) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 5 வருடங்களுள் ஏதேனும் குற்றங்களுக்குட்படாமல் 5 வருடங்களினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேர்துக் கொள்ளப்படும் முறை**- இந்தப் பதவிக்காக முறையான நேர்முகப்பரீட்சையின் மூலம் மற்றும் எழுத்துமுலப்பரீட்சையின்மூலம் தகுதியாயின் மாத்திரம் உரிய பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படும்.

**4. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒப்பந்தம் :**

(I) இந்தப்பதவி நிரந்தரம் ஓய்வூதிய தபுதாரர் நிதி செலுத்தல் வேண்டும்.
(II) பதவி 3 வருட காலத்திற்கு உற்பட்டது.
(III) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாக ஒப்பந்தங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உரிய அதிகார சட்டம் /சட்டங்களுக்கு உடன்படிக்கைகளுக்கும், பொல்கஹவெல பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட கூற்றுகளுக்கு ஒத்ததாக நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படல் வேண்டும்.

5. ஆரம்ப தகுதிகள் அனைத்தையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை**- எல்லா விண்ணப்பதாரிகளும் இங்க கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரப்படி விண்ணப்பப்படிவம் 2013.04.23 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், பிரதேச சபை, பொல்கஹவெல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் மேல் பக்கத்தில் "..........................பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடல் வேண்டும்.

தற்போது அரச/மாகாண சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பப்படிவத்தை தமது நிறுவனத் தலைவரூடாக அனுப்பவேண்டியதுடன் உரிய திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக்கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக்கொள்ளல் காலந்தாழ்த்தல் அல்லது இந்த அறிவித்தல் தள்ளுபடிசெய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கு பூரண அதிகாரம் பொல்கஹவெல பிரதேச சபை செயலாளரின் முடிவாகும்.

விண்ணப்பப் படிவத்தடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. பதவி பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
4. மிக அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 2 உம் ( ஒன்று கிராம அலுவலரினால் ஆதல் வேண்டும்) ;
5. அனுபவம் பற்றிய சான்றிதழ் இலக்கம் 1 மற்றும் 2 பதவிக்காக தேவையான தொழில் நுட்ப அனுபவம் பற்றிய சான்றிதழ்.

எச். எல். எம். ரிபாய்,
செயலாளர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

பிரதேச சபை,
பொல்கஹவெல,
2013.03.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொல்கஹவெல பிரதேச சபை**

வடமேல் மாகாணசபை அரச சேவையில் பொல்கஹவெல பிரதேச சபையின் பதவிக்காக ஆட்சேர்ப்பு-2013
..................................................................பதவிக்கான விண்ணப்பப்படிவம்

(1) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன்:----.
முதலெழுத்துக்கள்குறிக்கும் பெயர்:----.
(2) நிரந்தர இருப்பிட மாவட்டம்:----.
(3) நிரந்தர முகவரி:----.
(4) பொல்கஹவெல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் இருப்பிட காலம்:----.
(5) பிறந்த திகதி - ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.
(6) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது வருடங்கள்:----. மாதங்கள்:----. நாட்கள்:----.
(7) தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம்:----.
(8) ஆண்/பெண்:----.
(9) திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :----.
(10) நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவுமுறையிலா? :----.
(11) கல்வித் தகைமை- சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம் :----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்)
(12) தொழிற் தகைமை:----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்.)
(13) சேவை அனுபவம்:----.
(14) உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? :----.
(15) தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின்அதுபற்றிய விபரம்:----.
அந்த பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த):----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள்,உண்மையானதும்,பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டபின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ்படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:----

**தற்போத அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவக தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய ..........................................................................திரு./ திருமதி/ செல்வி தற்போது இற்த நிறுவகத்தில் ..................................................................................ஆக சேவை செய்கின்றார். அவர்/அவள் சேவையில் இருந்து விடுவிக்கமுடியும்/ முடியாது. அவர்/அவள் எந்த விதத்திலும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசி திகதிக்கு 5 வருட காலத்தினுள் எவ்வித தண்டனையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் தண்டனைக்கு உள்ளாகி யில்லாதவர் என்றும் அந்த 5 வருடத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றுள்ளார், என்பதை இத்துடன் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்பத்திரம் அனுமதித்து முன்வைக்கிறேன்/முன்வைக்கவில்லை.

-------,
திணைக்கள/நிறுவன அல்லதுஅதிகாரம்
அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்

பெயர்:-----.
பதவி :-----.
திணைக்களம் :----.
திகதி :----.

4-265

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாவனெல்லை பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபை சட்டத்தின் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது உறுப்புரையின் (1) ஆவது உப உறுப்புரையின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மாவனெல்லைப் பிரதேச சபையினால் 2012.12.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளமை பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

தலைவர்,
மாவனெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவனெல்லை,
2012.12.20.

**அட்டவணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது உறுப்புரையின் (1) ஆவது உப உறுப்புரையின் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 261 ஆவது அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது உறுப்புரையின் (1) ஆவது உப உறுப்புரையின் கீழ் சப்பிரகமுவ மாகாண, மாகாண சபை நிருவாக விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள 2011.01.28 ஆந் திகதியில் 1691 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட, சப்பிரகமுவ மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை 2012.03.30 ஆந் திகதி 1732 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) பகுதியில் வெளியிடப்பட்டுள்ள சப்பிரகமுவ மாகாணத்தின், மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் நுளம்பு மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழிப்பதற்கான சட்டவரைபு துணைவிதிகள் பற்றிய இப்பிரேரணை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து செயற்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்வதற்கு, மேலே நடாத்தப்பட்ட உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் மாவனெல்லைப் பிரதேச சபையால் பிரேரிக்கப்பட்டுள்ளது.*

4-111

### பிபில பிரதேச சபை

ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபை சட்டத்தின் 261 ஆம் அத்தியாயத்தின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி உரித்தாக்கப்பட்ட கருமங்களின்படி பிபில பிரதேச சபையினால் 2012.12.24 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமர்வின்போது கீழ்க்காட்டிய அட்டவணையின் 09.12 ஆம் இலக்க பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எஸ். ஏ. எம். சந்திரசேகர பண்டா,
தலைவர்,
பிபில பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிபில,
2013.02.27.

#### அட்டவணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சிமன்ற (இடைநேர்வினையான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (அ) பந்தியோடு வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயத்தோடு கூடிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (ஏற்றுக்கொள்ளப்பட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் படி தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் ஊவா மாகாண சபையின் கருமங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2012.10.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1778/45 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ முகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி இந்த பிரேரணை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவர ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்த மேற்கூறிய உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பந்தியின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பிபில பிரதேச சபை முன்மொழிகின்றது.*

4-198/1

---

### பிபில பிரதேச சபை

ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபை சட்டத்தின் 261 ஆம் அத்தியாயத்தின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி உரித்தாக்கப்பட்ட கருமங்களின்படி பிபில பிரதேச சபையினால் 2012.12.24 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமர்வின்போது கீழ்க்காட்டிய உப அட்டவணையின் 09.13 ஆம் இலக்க பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எஸ். ஏ. எம். சந்திரசேகர பண்டா,
தலைவர்,
பிபில பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிபில,
2013.02.27.

#### உப அட்டவணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சிமன்ற (இடைநேர்வினையான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (அ) பந்தியோடு வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயத்தோடு கூடிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (ஏற்றுக்கொள்ளப்பட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் படி தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் ஊவா மாகாண சபையின் கருமங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2010.11.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1678/4 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழித்தொழிக்கும் முகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி இந்த பிரேரணை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவர ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்த மேற்கூறிய உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பந்தியின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பிபில பிரதேச சபை முன்மொழிகின்றது.*

4-198/2

**அறநாயக்க பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24(2) ஆம் உறுப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது உறுப்புரையின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் அறநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அறநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள்/வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமைபாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அறநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமாக பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஆர். தினேஷ் குணரத்ன,
தலைவர்,
அறநாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அறநாயக்க,
2013.03.18.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தலகஹ கெதர பாதை குறுக்குப் பாதை |
| பாதையின் தொடக்கம் மற்றும் முடிவு | : | தலகஹ கெதர பாதையிலிருந்து நாரங்கஹபிட்டியவத்த வரை |
| கிராம சேவகர் பிரிவு, இலக்கம் | : | 47/A, தெபத்கம பல்லேபாகே |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | 400 மீற்றர், 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு எம். சீ. எஸ். கே. விக்ரமசிங்க | பல்லேவத்த இடம் |
| 2. திரு. ஏ. ஜீ. பீ. சீ. சந்தருவன் | கல்லிதஹேன இடம் |
| 3. திருமதி கே. ஜீ. இந்திராணி குமாரி | நாரங்கஹதென்ன இடம் |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. டி. பியசேன | போகஹவத்த இடம் |
| 2. திருமதி கே. டி. ஞானவதி | கலுகொஹொவத்த இடம் |
| 3. திரு. கே. டி. நிமல் ரத்நாயக்க | கம்மலவத்த இடம் |
| 4. திருமதி எஸ். என். நந்தாவதி | நாரங்கஹபிடிய இடம் |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அலுபத லீலாகமை பாதையின் நெற்களத்திற்கு அருகே பண்டாரவத்தை வரையுள்ள பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அலுபத லீலாகமை பாதையின் நெற்களத்திற்கு அருகே ஆரம்பித்து பண்டாரவத்தை காணியில் முடிவடையும் |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 46 நிக்கபிட்டிய |
| பாதையின் நீளம் | : | 96 மீற்றர் அகலம் : 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும் :

| | |
|---|---|
| 1. திரு ஆர். எம். டி. பியசேன | மீகொன்கொட்டுவை |
| 2. திரு. ஆர். எம். டி. எஸ். கமல் சந்திரரத்ன | பொல்தெனியவத்தை |
| 3. திரு. ஏ. கே. அபேகுணவர்தன | பொல்தெனியவத்தை |
| 4. திரு. டி. பீ. எம். அபேரத்ன | பொல்தெனியவத்தை |
| 5. திரு. ஐ. பீ. நிஹால் குணரத்ன | பொல்தெனியவத்தை |
| 6. திருமதி ஐ. டி. சித்ரா மாபோபிட்டிய | பொல்தெனியவத்தை |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும் :

| | |
|---|---|
| 1. திரு ஆர். எம். டி. பியசேன<br>திரு. ஆர். டி. கர்நிஸ் | மீகொன்கொட்டுவை |
| 2. திரு. ஐ. டி. சுனில் சோமரத்ன | பொல்தெனியவத்தை |
| 3. திரு. ஆர். எம். டி. ஏ. காமினி ராஜகருணா | பொல்தெனியவத்தை |
| 4. திரு. ஐ. டி. எஸ். கருணாதிலக | பொல்தெனியவத்தை |
| 5. திரு. ஆர். டி. எஸ். கமல் சந்திரரத்ன | பொல்தெனியவத்தை |
| 6. திரு. ஏ. பீ. டீ. பீ. துஷார அலகல்ல | பொல்தெனியவத்தை |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் ஆந் திகதி ஆம் இலக்க பட வரைபுத் திட்டத்திற்கு ஏற்ப.

*4-262*

---

### மட்டக்களப்பு மாநகர சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம்

